சைவ பரிபாலன சபை வெளியீடு
ஆரம்பம்: விரோதி ௵ (1889-ம் ஆவணி ௴ 28-ந் உ.

உ
சிவமயம்

University of Jaffna Sri Lanka
RECEIVED
1983-10-07
Periodicals Division
Library

செய்தித்தாளாகப் பதிவு பெற்றது

# இந்து சாதனம்

வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

Hindu Organ

பிரதி விலை: சதம் 40

புத் - 94 ] யாழ்ப்பாணம்:- துந்துபி ௵, பங். ௴ 18, 25-3-83 1, 8. 15-4-1983 வெள்ளிக்கிழமை [இல -16,

# வயதால் சைவவளத்தால் மாநிலத்துக்கோர் வளர்மதி தகைமைசால் சைவபரிபாலனசபை

## சேவை நூற்றாண்டைநோக்கி சென்று திகழும் மன்று

தோன்றிற் புகழொடு தோன்றுக என்று ஆன்ற அறிஞர் வள்ளுவநாயனார் திருவாய்மலர்ந்த மதிமொழிக்குச் சான்றாக நின்று நிலவிவரும் யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை தனது தொண்ணூற்றாறாம் சேவை ஆண்டிற் செல்கின்றதென்ற செய்தி "ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோனெனக் கேட்ட தாய்" என்றாங்கு சைவ உலகமாம் தெய்வீக அன்னைக்கும் அன்னவளின் வழிவழிக் குழந்தைகளாய் முத்தியின்பம் அடைவதற்கிப்பிறவி எய்தியதென்று எண்ணுகின்ற அத்தனை அடியார்களுக்கும் களிபேருவகையைக் கொடுப்பதொன்றாகும்

'என்னே இளமை! என்னே முதுமை!
பொன்னு டிலங்கை நன்னு டிலங்க
முன்னுவி நாவலர் சொல்நா வன்மை
அந்நான் அன்பர் என்போர் யார்க்கும்
மன்னிய மரபில் நன்னய மாகக்
கன்னலின் மிக்க இன்சுவைச் செந்தமிழ்
பன்னி மகிழ்ந்து தொன்மை நூல்கட்
கின்னுரை இயம்பிய பொன்னம் பலமணி
வித்துவ சிரோமணி மெத்தகு தலைமையிற்
புத்தாண் டுபொலி வித்து,சர் வதாரி
சித்திரைத் திங்கள் இத்தரை இட்டனர்
ஆன்றோர்,
உளநல மோங்கி வளர்மதி தாங்கி
இளநகை வனப்புக் குழவிப பருவமும்
இளமை எழுச்சி எழிலின் பருவமும்
சிறந்தே குருட்டி இறும்பூ தெய்திக்
குறுநகை போட்டு விறுவிறுப் படைந்து
வெள்ளிபொன் வைர ஒள்ளியல் விழாக்கள்
உள்ளவை கண்ட வள்ளலாய் ஓங்கி
வெண்பிறை முடித்த கண்ணுதல் போற்றி
ஒண்பிறை ஆயிரம் கண்டு களித்துத்
தெய்வ நாதமாய்ச் சைவ நீதி
மெய்ம்மை விளக்கி உய்வகைஉணர்த்தி
ஐந்தெழுத் தேமுதல் மந்திர மாகச்
செந்தமிழ் அழகே சிந்தனை யாய்ப்பணி
புரியும் சைவ பரிபா லனசபை
அரிதே அரிதே! பெரிதே பெரிதே!
என்னே இளமை! என்னே முதுமை!
என்றே இநநிலம் நன்றே
செப்பி ஏததிட வல்லமை தின்னதே.

## வித்துவ சிரோமணியின் மாணாக்கர் வித்துவசிரோமணி

ஆறுமுக நாவலருக்கொரு மாணாக்கர் வித்துவ சிரோமணி. அந்த வித்துவ சிரோமணிக்கொரு மாணாக்கர் வித்துவசிரோமணி. இத்தகைய பேறு உறுவது கூறுதற்கரிய பெருமையன்றோ. வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளையின் மெத்தகு தலைமையில் உதயமான சைவ பரிபாலன சபையின் தொண்ணூற்றைந்தாம் ஆண்டு வைபவத்தை நினைக்கும் அவ்வேளையில் அந்தக் கலாவிநோதரிடம் கல்விகற்றுக் காலத்தில் வித்துவ சிரோமணிப் பட்டம் சூட்டப்பெற்ற சிவஸ்ரீ சி. கணேசையர் அவர்களின் நூற்றைந்தாம் ஆண்டு நினைவு நிகழ்ச்சியும் எய்துவது செந்தமிழ் அன்பர்க

(வளர்ச்சி 5 ஆம் பக்கம்)

## சைவமாம் சமயம் சாரல்

உலகம் உண்டானதற்கும் உய்வதற்கும் ஒரு ஏது வேண்டும். அல்லவா. அந்த ஏதுதான் இறைவன். எங்கள் எல்லோருக்கும் இயக்கர் ஆக. இருப்பவன் இறைவன். நாங்கள் என்று கூறும் பொழுது மானிடர்களையே குறிப்பிடப்படுகின்றது. எனினும் இறைவன் எல்லா உயிர் இனத்தாக்கும் உரியவன்

இறைவனை யாவற்றிற்கும் ஏது என்று எப்படி எடுத்துச் சொல்லலாம் என்றால் உலகம் உண்டாக, இயங்க, உய்ய வேறொன்று காரணமாயுண்டென்று இதுவரையும் எவரும் சொல்லவும் இல்லை, சொல்ல முடியவுமில்லை

ஒன்றை உண்டுபண்ணும் ஆற்றல் உள்ளவரை இறை என்று சொல்லிக் கொள்வது உலகியல் வழக்கு அந்த ஆற்றலுக்கு மேலாக வேறொரு ஆற்றலுமில்லை என்பதையே இறை என்ற சொல் எடுத்துக் காட்டுகின்றது.

"மேலொருவன் இல்லாதான் எங்கள் இறை" என்று உமாபதி சிவாசாரியர் பொருத்தமான வரைவிலக்கணம் வகுத்திருக்கின்றார்.

உண்டாக்கப்பட்டவை, உண்டாக்கியவர் என்று இருசாரார் உண்டு என்ற உண்மையை நாங்கள் ஊகித்தறியலாம். ஒன்று எம்மாற் காணப்படுவது. மற்றையது எம்மால் உணரப்படுவது.

இன்னமும் ஒன்று இவ்விருசாராருக்கும் இடையில இருப்பதையும் நாங்கள் ஊகித்துணரக்கூடியதாயிருக்கின்றது. உண்டாக்கப்பட்டவையோடு ஊடுருவிக் கொண்டிருப்பது தான் அந்த மூன்றாவது. உண்டாக்கப் பட்டவையை உயிர் இனம் என்றும் பசு வென்றும் சமய நூல் செய்தவர்கள் கூறுவர்.

ஊடுருவி நிற்பதனைப் பாசம் என்றும் பந்தம்

(வளர்ச்சி 2 ம் பக்கம்

## உருதோற்காரி ஆண்டு உதயம் உலகுக்கு நன்மை ஊட்டுமா

### புத்தாண்டு வருகை பொலிகவெனப் போற்றுவோம்

எவ்வாறு இவ்வேளையில் ஈசனை இறைஞ்சுவோம் என்றெண்ணும் பொழுது ஞானசம்பந்தப்பெருமான் திருவாய் மலர்ந்த தேவாரத்தில் ஞாலம் நின் புகழே மிக வேண்டும் தென் ஆல வாயில் உறையுமெம் ஆதியே" என்ற திருவாக்கு உள்ளத்தை ஊக்குவிக்கின்றது;

திருச்சிற்றம்பலம்
அந்த ணாளர் புரியும் அருமறை
சிந்தை செய்யா அருகர் திறங்களைச்
சிந்த வாதுசெய்த் திருவுள்ளமே
வெந்த நீறணியும் விகிர்தனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையுமெம் ஆதியே
திருச்சிற்றம்பலம்

## நோயுற்றோர்க்குத் தாயன்புநோக்கிப் பரிகாரம் அளிப்பது மனிதப் பண்பு

—0—

### வைத்தியசாலையிற் சத்திர சிகிச்சைச் சித்திக்குரிய உபகரணங்கள் தேட உதவுவது உந்நத தருமம்

தீரா நோய் தீர்த்தருள வல்லான் சிவபெருமான்; அந்த ஈசனுக்கும் அருட் சத்திக்கும் மூர்த்தங்களுக்கும் ஆலயங்கள் அமைத்து அர்ச்சனை செய்கின்ற பயன் நோயாளிகள் வைத்திய உதவி பெற்று ஆறுதல் அடைவதற்குச் செறியுமேயானல் இந்தவழிபாடு ஆன்ம கோடிகள் அனைவருக்கும் உரியதாகும்.

திருக்கோயில்களிலே வழிபடுவோரின் காணிக்கைகளில ஒரு சிறு பகுதியேனும் திக்கற்றவர்களுக்குப் பயன்பட உதவுமேயானல் அது ஆலய தருமமாகவே அமையும்.

நோயாளர்கள் பல தரப்பட்டவர்கள். வைத்திய சேவை பெறக்கூடிய வளமுள்ளவர்கள், ஓரளவு வளமுள்ளவர்கள், ஒரு வளமுமே இல்லாதவர்கள்

உடல் உறு நோய்களுமோ பல வேறு வகையின; உடனடியாகச் சிகிச்சை செய்யப்பட வேண்டியன இவற்றுள் ஏராளம். அவசர வைத்தியமென்றால் அதற்குரிய ஆயத்தங்கள் அவசியம். விஞ்ஞான விவேகமும் வேண்டிய அநுபவமும் வாய்ந்த வைத்திய கலாநிதிகள் பலர் இருந்தாலும் சிகிச்சைக்குரிய சிறந்த உபகரணங்களில்லையேல் நோயாளிகள் வைத்திய வாய்ப்பினைப் பெற முடியாதவர்களாய் அல்லற்படுவர்;

யாழ்ப்பாணத்தில் மாபெரும் வைத்தியசாலை எந்த நோய்க்கும் உகந்த சிகிச்சை உதவக்கூடிய வகையில் விருத்தியடைந்து வந்திருக்கின்றதெனினும் நவீன உபகரணங்கள் பல இல்லாமையால் வைத்தியசேவை பாதிக்கப்படுகின்ற நிலைமை ஏற்படுகின்றது. அரச நிதியிலிருந்து உபகரணங்களை முற்றாகப் பெறமுடியாது; பெறலாமென்று எண்ணுவது பிழை; எனவே பரோபகாரப் பெருமக்கள் இவ்வகையிற் கை கொடுப்பது அவசியமாகின்றது; தமிழ்ச் சால்பும் சைவ நெறியும்

(வளர்ச்சி 5 ஆம் பக்கம்)

## கதியற்றோருக்குக் கல்வித்தானம்

### வாரியார் பெரியார் வாரி வழங்குகின்றார்

ஒரு கதை விரிவுரை செய்ய இவ்வளவு பணம் இறுக்கவேண்டுமா என்று திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் இன்னிசைக்கதை விருந்தளிக்கும்போதெல்லாம் பொற்கிழி பெறுகின்றார் என்று பேசிக்கொள்கின்றவர்கள் உண்டு. ஆனால் வாரியார் அறிஞர் இவ்வாறு பெறும் பொற்குவியலின் அரைப் பங்கை நூற்றுக்கணக்கான சின்னஞ் சிறுவர்கள் கலைச்செல்வம் பெற வாழ்க்கையை அமைப்பதற்கு ஈந்துவக்கின்றனர் என்ற உண்மையை அவர்கள் அறியவில்லை இத் தருமம் தாய்நாட்டிலேயே செறிகின்றதென்றால் வாரியார் பெரியாரை இந் நாட்டில் உள்ள அனாதர் இல்லங்களுக்கும் இயன்றதை ஈயுநகள் என்று உரியவர்கள் வினவின் அன்னார் இல்லையென்று சொல்லமாட்டார்.

வடிவேற் பெருமானை வணங்கி வாழும் வாரியார் அடியார்

வையிற் கதிர்வடிவேலனை வாழ்த்தி வறிஞர்க்கென்று
நொய்யிற் பிளவாவேனும் பகிர்மின்கள்—

என்ற கந்தர் அலங்காரச் சிந்தனையை அடிக்கடி சிந்திக்கும் அடியார் இவ்வாறு வழங்காமற் போவாரா?

---

### "எல்லாம் முன்னே முடிப்பான்

— என்றார் அப்பர் சுவாமிகள்

## "எப்போழுதோ முடிந்த காரியம்"

— என எடுத்தார் யோகர் சுவாமிகள்

கொழும்புத்துறை யோகசுவாமிகள் சமய சாத்திரங்கள், திருமுறைகள், ஏனைய மெய்யறிவு நூல்கள் யாவும் நன்கறிந்தவர் அந்தவளத்தினால் அவ்வப்பொழுது அருங்கருத்துக்களை முடிந்த முடிபாக முன்னோர் அருள்வாக்கின் நன்னயமாக எடுத்துரைத்து அடியார்களுக்கு ஆனநெறியில் அரிய உபதேசம் செய்தனர்.

திருகிறைசெம்மையே செம்மையாய்க் கொண்ட திருநாவுக்கரசு சுவாமிகள் திருக்காளத்தித் திருத்தாண்டகத்திலே (6ம் திருமுறை) தன் கண்ணுள் காளத்திக் கடவுளைக் கண்டாங்கு

திருச்சிற்றம்பலம்

இடிப்பான்காண் என்வினையை ஏகம்பன்காண் எலும்பா
பரணன் காண்
எல்லாம் முன்னே
முடிப்பான் காண் மூவுலகு மாயினான்காண் முறைமையால்
வழுவாவண்ணம் ஐம்புரியும்
படித்தான் தலையறுத்த பாசுபதன் காண் பராய்த்துறையான்
பழனம்பைஞ் - ஞீலியான் காண்
கடித்தார் கமழ்கொன்றைக் கண்ணியான்காண்
காளத்தியான் அவனென் கண்ணுள்ளானே
திருச்சிற்றம்பலம்

திருக்காளத்தி ஈசுவரர் தேவியாக ஞானப் பூங்கோதை காட்சியளிக்கும் தலமிங்கு திருவாய் மலர்ந்தபெற்ற ஞானமொழியாம் "எல்லாம் முன்னே முடிப்பான் காண்" என்பதனை ஞானவொளி பெற்ற யோகர் சுவாமிகளும் சுவையாகச் சொன்னார் "எப்பொழுதோ முடிந்த காரியம்" (குருபூசை நினைவுக் குறிப்பு)

## திருநாட்டின் சேந்தமிழ்ச் சீர் நூல் செய்தார்

செந்தண்மை பூண்டொழுகும் செம்மை நிகழ்குலத்தில்
வந்துண்மைச் சைவநெறி மாண்நன்கு— வந்தெண்ணம்
தொல்காப் பியத்திற் சுவைத்த கணேசையர்
ஒல்காப் புலமை உயர் (1)

வருத்தலையில் வைகும் மருதடி விநாய
கருத்தமைத் தொண்டுக் கருமத்— திருத்தியசீர்
நல்லிலக்க ணத்து நயத்தைக் கணேசையர்
சொல்லநின்ற தொல்காப் பியம் (2)

சொல்லைத் துணைத்துத் தொடுமெழுத்தின்
போக்கமைத்து
நல்ல பொருட்கு நயமுரைத்து — மெல்ல
மெருகூட்டி நூல்செய்தார் வித்துவக ணேசர்
திருநாட்டின் செந்தமிழ்ச் சீர் (3)

---

## "வெப்பொடுவிரவியோர் வினைவரினும் அப்பா உன் அடியலால் அரற்றுதென் நா"

எமக்கு ஈவதற்கு என்றும் ஈசன் இருக்கின்றான். இதுவே சைவ சமயத்தின் மரபுப் பண்பு இவ்வுண்மையை எடுத்த இடமெல்லாம் எடுத்துக் காட்டினர் அடியார்க்கடியவர்களாம் அந்த நால்வர். அப்பர் அடிகளின் அருமையான தேவார அடிகளை முன் வைத்து அல்லல் அகற்ற ஆனவழி தேடாமல் அலைகின்றோமே. விழலுக்கு நீர்ப் பாய்ச்சுவதும் வெற்றுரை பகர்வதும் வீண் வீரம் பேசுவதுமாக முடிகின்றதே எங்கள் முயற்சி.

செந்தமிழ் வழி வந்த சிவ சமயிகள் சிந்தனைக்குரிய திருவாவடுதுறைத் திருப்பதிகத்தை இங்கு எடுத்துக் காட்டி இன்னலும் இடரும் எம்மைச் சூழ்ந்திருக்கும் இன்று ஈசனை இடைவிடாதெண்ணி இதயத்தில ஞான ஒளி காண்போம்.

இடரினும் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே

இதுவோஎமை யாளுமாறீவ தொன் றெமக்கில்லையேல் அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை யரனே.

---

## திருவிளையாடல் விரிவுரை செவிமடுத்துப் பரிசு பெற்ற பைந்தொடியார்

### வண்ணை வைத்தீசன் கோயிலில் நவமான வைபவம்

பங்குனி உத்தரத்திலே தீர்த்த விழாவுடன் பெருந் திருவிழாக்காலம் நிறைவுற்ற புண்ணிய புனித வேளையில் நித்தமும் மாலைப் பொழுதில் இறைவன் திருவிளையாடல்களை இயற்றமிழ்ச் சொற்பொழிவு ஆற்றிய செந்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் புராண விரிவுரை செய்துவிட்டாற் போதாது! கருத்துரை செவி மடுத்துவிட்டால் அமையாது! கேள்விச் செல்வத்தை நிரந்தரபொக்கிஷமாக்குவது வேண்டற்பாலது என்ற வகையிலே சாற்றுரை நிறைவிலே இரசித்துக் கேட்ட அடியார்களுக்கு ஒரு தேர்வுநடாத்தி அதிற் சித்தியடைந்தவர்களின் தரத்துக்கேற்ற தக்கவாறு பரிசு வழங்கியமை ஒரு புது விதப் பிரசார நிகழ்ச்சியாயமைந்து வைத்தீசன் கோயில் வழிபடும் பெண்மணிகளுக்கும் பேருதவியாய் நிறைந்தமை பாராட்டுக்குரியதொன்றே.

பங்குனிப் பூரநாள் தேர் விழாவாம் நன்னாளில் எழுந்தருளி மூர்த்திகள் பெருவீதி வலம் வந்து கோபுர வாயிலில் வந்தடைந்தபின அடியார்களின் அர்ச்சனை நிகழ்ச்சியைத் தொடர்ந்து அடியார்கள் தங்களுக்கு அரிய சமய அறிவு நுகர்ச்சி வழிபாட்டில் அர்ககாதாரந் தரிக்குப் பாராட்டுப் பகர்ந்தமை பொருத்தமாய்விளங்கியது.

திருப்பூங்குடி அன்புக்கடல் வி. வி. கே. ஆறுமுகம் அவர்கள் திருமுறை ஓதி வரவேற்புரை நிகழ்த்தியபின் திருவிளையாடற் புராண விரிவுரை கேட்ட அடியார்களுக்கென நிகழ்ந்த தேர்வு முடிவுகளைச் செந்தமிழ்ச் செல்வி அறிவித்து அவர்களுக்குத் தக்கவாறு பரிசு வழங்கி ஊக்க உரை நிகழ்த்தினர்.

பாராட்டு வைபவத்திற்குத் தலைமை தாங்கிய பேராசிரியர் சு. வித்தியானந்தன் செல்வி தங்கம்மாவுக்குப் பாராட்டு சொல்லில் அடங்காதென்றும் எத்துறையிலும் எவ்விடத்திலும் ஏற்றபடி சொற்பெருக்காற்றி மக்களின் சமய வாழ்வு நன்கமைய வைக்கும் தொண்டர்க்கரசியாக இவர் விளங்குகின்றார் என்று விதந்துரைத்தனர்.

பண்டிதை தங்கம்மா தாம் இந்தப் புண்ணிய தலத்தில் நாவலர் சொற்பெருக்காற்றிய இடத்தில் தொடர்ந்து புராண விரிவுரையாற்றக் கிடைத்த பேறு புண்ணிய வசத்தாலாயதென்றும் இப்பணியைச் சைவத் தமிழ்ப் பேரறிஞர்கள் ஏற்றுக்கொண்டு நல்லாசிவழங்குவது தமக்கு மேலும் ஊக்கத்தைக் கொடுப்பதாய் அமைகின்றதென்றும் தேவத்தானத்தார் இந்த முறையைக் கையாண்டது வரவேற்கத்தக்கதென்றும் பதிலுரையிற் பகர்ந்தனர்.

கலாநிதி கோபாலகிருஷ்ண ஐயர் விழாக்களின் தத்துவத்தைச் சுருக்கமாக நல் விளக்கமாக எடுத்துக் காட்டினர்.

பண்டைக் காலத் திருக்கோயில்கள் வரிசையில் உள்ள வண்ணை ஈஸ்வரன் கோயில் ஏற்றமான எழுச்சி பெறும் இவ் வேளையிலே அடியார்கள் தங்கள் கடமையை இன்னும் ஓர் அம்சத்தில் ஆற்றக் கடமைப்பட்டிருக்கின்றனர்.

---

## சித்திரா பூரணை தேவி தீர்த்தம்

### நகுலகிரி நாயகி அடியார்க்கு மிகுகருணை

சித்திரா பூரணை, சித்திரைச் சித்திரை என்ற திவ்விய விரதங்களை அனுட்டிக்கும் அடியார்கள் கீரிமலைப் பூர்வீக சிவன் கோயிலிலே தேவி விழாக்கள் கண்டு திருஉலாவும் தரிசித்துச் சமுத்திரதீர்த்தமும் ஆடிப் பெரும் பேறடைய நகுலேஸ்வரி தேவத்தானம் நல்ல ஒழுங்குகளை வழமை போல எடுத்திருக்கின்றனர்.

புத்தாண்டில் முதனாந் திங்கள் முக்கியமானது. மானிப்பாய் மருதடி விநாயகர் முதலாக விநாயகப் பெருமான் ஆலயங்களும் கதிரமலைச்சிவன் உடுவில். மீனாக்ஷி சுந்தரேசா காவி மீனாக்ஷி சுந்தரேசர், சுதுமலை புவனேஸ்வரியம்மை கோயில்களிற் பெருவிழாக்காலம் சிறப்பாக நடைபெற்றது. — —

### அர்ச்சனையில் வெற்றிலை, பாக்கு பழம்

வெற்றிலை நம் உடலைக் குறிக்கும். தூல சூக்கும உடல்களைக் குறிக்க இரண்டு வெற்றிலை வைப்பது வழக்கம். தூல உடல் சூக்கும உடல் காரண உடல் மூன்றையும் குறிக்க மூன்று வெற்றிலையும் வைக்கலாம். நோயில்லாமல் நம்முடல் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என வேண்டுவதே இதன் குறிக்கோளாகும்.

பாக்கு — செல்வத்தைக் குறிக்கும். இரண்டு வாழைப்பழங்களும் நாம் செய்யும் நல்வினை தீவினை இரண்டையும் குறிக்கும். எனவே ஆரோக்கியம் செல்வம், பாவ - புண்ணிய விநிதலை ஆகிய மூன்றையும வேண்டியே வெற்றிலை பாக்கு, பழம் வைத்து அர்ச்சனை செய்கிறோம். இவற்றோடு தேங்காயையும் வைத்து அர்ச்சனை செய்வதன் நோக்கம் ஆரோக்கியம் செல்வம், பாவ புண்ணிய நீக்கம் என்பவற்றோடு ஞானத்தையும வேண்டிப் பெறுவதாகும். இவ்வாறு அர்ச்சனைக் கிரமத்துக்குக் காரணம் பொழுது அந்த நியமும் நினைவில் நிற்கும் தகை பெறுகின்றது.

---

இராஜ கோபுர அமைப்பு சிறப்புப்பாகவும் சுறுசுறுப்பாகவும நிகழ்ந்து மகா கும்பாபிஷேகம் இவ்வாண்டிலேயே நடைபெறத் திருவருள் பாலிக்க அடியார்களின ஆராதனைப் பேராற்றல் பெருக வேண்டும். தர்மகர்த்தாக்கள் இக் கருமத்திற் கண்ணும் கருத்துமாயிருக்கவும் அந்தணப் பெருமக்கள் ஆகவேண்டியவர்களுக்கு அர்ச்சிக்கவும் வண்ணை மாநகரப் பெருமக்கள் மனம் மகிழ்ந்து கனி உவந்து திருப்பணி செவ்வனே நிகழ உழைக்கவும் வைத்தீசுவரப் பெருமானும் தையல் நாயகி அம்மையும் சிவ சக்தியும் அருள் புரிவார்களாக.

# துர்க்காதேவி திருப்பணி விரிவு

அடியார்களின் கோயிற் கிரமங்களுக்கு வசதியாக ஒரு புது மண்டபம் தென்கிழக்கே கோயிலுக்குரிய தெற்குப்பாதை முகப்பில் நவமாக அமைக்கப்பட்டுள்ளது. இம்மண்டபக் குடிபுகுதல் உருத்திரோற்காரி வருட ஆரம்பநாள் காலை நடைபெற்றது.

சித்திரத்தேர் எத்துணைச் சிறப்பாக அமைந்துள்ளதோ அத்தகைமையில் சப்பறமும் சித்திர வடிவாக அமைக்கப்படுவதற்கும் ஆயத்தம் மேற்கொள்ளப்பட்டது.

துர்க்கா கோயிலுக்குப் பெருந்திரளான மக்கள் விசேட வேளைகளிலும் செவ்வாய் தோறும் நெடும் பயணம் மேற்கொண்டு வருவதனால் அவர்கள் பேருந்து வண்டிக்குக் காத்திருக்கும் இடம் காற்று, மழை, வெய்யிலிலிருந்து காப்பாற்றும்படி வேண்டியதை மனத்திற்கொண்டு தெல்லிப்பளை இந்து இளைஞர் சங்கத்தினர் மிக நீளமானதும், விசாலமானதும் ஒதுக்கானதுமான ஒரு தங்குமண்டபத்தை அமைத்திருக்கின்றனர். இம் மண்டபத் திறப்புவிழா 17-?-8? துர்க்கா துரந்தரி, செல்வி, தங்கம்மா, அப்பாக்குட்டி அவர்கள் தலைமையில் வட-பிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. சி. கனகரத்தினம் அவர்களால் நிகழ்த்தப்பெற்றது. சிவதர்ம வள்ளல் க. கனகராசா அவர்கள் சிறப்புரை பகர்ந்தனர்.

அதன்பின் இந்து இளைஞர் சங்கத்தின் 17-ஆம் ஆண்டு விழா சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தலைமையில் நடந்தது.

# சித்திரையை நினைவூட்டும் சிறந்த நிகழ்ச்சி

வள்ளல் பொன் இராமநாதன் அவர்கள் மாநிலத்து வந்த திங்கள் சித்திரை. இந்த மேடமாதத்தில் அந்தப் பெரியாரின் எண்ணம் இடித்துக் கொண்டு எங்கள் இதயங்களை ஊடுருவும். என்னையெனின், கற்றுங் கடவுளை வணங்கிச் செயற்படி செய்கையிலும் சுத்தனாய் வாழ்ந்து மக்களை வழிகாட்டுபவர் இவர். இன்று என்றுமில்லாதவாறு அன்புறும் இந்நாட்டு மக்கள் இவர் இன்னும் ஒரு கால் இவ்வுலகில் இவ்விடத்தில் உரு எடுக்க மாட்டாரோ என்று இறைவனை இறைஞ்சுகின்றனர்.

சைவ சித்தாந்தச் செம்மல், செந்தமிழ்ச் சீர் அறிந்த சீலர். ஆங்கிலத்தில் அரிய அறிஞர். சட்டத்துறைப் புலவர், நூல்பல இயற்றி மக்களின் சால்புக்கு வழிகாட்டியவர். பல கலைக்கழகத்து வித்திட்டு பாரிய இரு கல்விக் கழகங்களை நிறுவியவர். பன்னூற்றுக் கணக்கான பாடசாலைகளைக் சைவ நெறியோங்க வைத்த இந்து வித்தியா விருத்திச் சங்கத்தை நிறுவியவர் சிவதத்துவங்களைப் பேணிச் சீருடன், முன்னோர் முயன்ற பாதையில் நின்று பாதுகாத்தது மன்றிச் சிவாலயங்களைக் கல்வி கழகங்களுக்குப் பயன் படக் கட்டிப் பிரதிட்டையும் செயவித்தவர்.

பொருள் வளம் பெருகப் பரந்தன் இரணைமடுப் பகுதியில் ஆயிரக் கணக்கான பரப்புக் காட்டு நிலங்களைப் பெற்றுச் சீராக்கி ஏராளருக்கு ஏற்றதாகப் பண்படுத்து பெற்றுளவுகளைத்தும் ஆக்கியவர் இவரன்றோ தலைவர்! — —

## Jaffna Esplanade

(continued from page 6)

splendour of the lovely landscape - the Lagoon, the Fort, the Moats, the Esplanade, the Huge Trees and what not

It is a matter of regret to reiterate what we had oft and on commented in these columns of the "Hindu Organ" that the Northern City has been neglected with a vengeance. The drainage system of the Dutch Administration has gone to the dogs dirt and refuse mingled with bacteria - based water-escaping the faulty drains impose a serious threat to the sanitation of the city. It is a wonder how eating - places and recently established hotels thrive in these suffocating circumstances Bottle necks in the road-way system add to the inconvenience of the ever-increasing traffic, new buildings encroaching on the already shrinking width of streets, The City has become unmanageably big by the vast concourse of people who throng there from the early hours of the day till late in the night; but everything else has dwindled.

City - Fathers may come and go but the sorry spectacle of this Northern City of ancient glory has to go on for ever!

Can anything be done? We just put the question to those who have to answer it.

# வித்துவ சிரோமணியின்

(1-ஆம் பக்கத்து வளர்ச்சி)

வின் சிந்தனைக்குரியதாகும். ஆகவே சைவபரிபாலன சபை வைபவச் சிறப்பாக வெளிவரும் இவ்விதழிலே வித்துவசிரோமணி கணேசையர் அவர்களைப்பற்றி எழுதுவது எழிலுடைத்தாம் என்க.

அந்தணர்குலத்து வந்தவர்கள் எல்லோரும் செந்தமிழ் அறிஞர்களல்லர். வடமொழி வல்லுநர்கள் செந்தமிழ் அறிஞர்களாவதும் அரிதே. இவ்வாறு அரிய சிறப்புக்குரியவர்களில் ஒருவர் பிரம்மஸ்ரீ கணேசையர் அவர்கள் காசிவாசி செந்தில்நாத ஐயரவர்கள் முதலிய வேதியச் செம்மல்களில் ஒருவராய்ப் புகழ் படைத்த வித்துவ சிரோமணி ஐயர் உருவத்தால் அருந்தவ சீலர் போன்றவர் கருத்தால் கண்ணுதற் கடவுளைக் கைதொழுதலும் அக்கடவுளின் அருளுக்குரிய கன்னித் தமிழைக் கனவிலும் நனவிலும் நினைத்த வண்ணம் இலக்கண வித்தக பரம்பரை வித்துவ வேலையில் ஈடுபட்டவர்.

கரைபிலாக் கல்விக் கடலில் காலன் கைதொடும் காலம்வரைக்கும் நீந்தியவண்ணம் நீடு வாழ்ந்த இக் கவுணியப் பெருந்தகை நிரம்பிய நூலுளர் என்று கற்றோர் விரும்புந் தகைபிராய்க் கலையுலகில் இலகொளி பரப்பி வந்தனர்.

அரங்கின்றி வட்டாடியற்ற நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்

என்ற வள்ளுவர் உரை கல்வித் பரிசிலனை செய்தால் வித்துவ சிரோமணியின் நிரம்பிய அறிவும் இலக்கணவுரைகளுக்கு இயற்றிய விளக்கச் செறிவும் அன்று அரங்கில், ஒரு அணியாக விளங்கினர் என்பது புலப்படும்.

பல்பொருள் விளக்கத் தொல்காப்பியத்துக்கு உரை காண்டல் அரிது. அவ்வாறு அரிதினும் அரிதே இப் பரிசினை எய்தியவர் எங்கள் வேதியர் வித்துவ சிரோமணி.

வாலறிவன் நற்றாள் தொழும் சீலமுடையார்களே கற்றதன் பயனை உற்றனுபவிக்கும் பாக்கியம் பெறுவார்களே. கற்றதன் பயனை உற்றனுபவிக்கும் பாக்கியம் பெறுவார்களே. இந்த உண்மையை எங்கள் நாட்டில் நாவலர்பெருமான் முதலாகப் பல்கலைஞர்களிற் காணமுடியும். அவ்வழி வித்துவ சிரோமணிஐயரும் சமயியாகத் வாழ்ந்தமையே அன்னாரின் நுண்மாண் நுழைபுலச் செறிவுக்கு வழிவகுத்த தென்க.

# நோயுற்றோருக்குத் தாயன்புநோக்கி

[1 ம் பக்கத்து வளர்ச்சி]

சார்ந்த இக்குடாநாட்டிலே உயிர் கொடுக்கும் உத்தம தரும சிந்தை உடையவர்கள் அநேகர் உளர். அவர்கள் யாழ்ப்பாணம் மாபெரும் வைத்தியசாலையின் வளர்ச்சிக்குப் பல வழியிற் பணிசெய்துவருகின்றனர். அப்படியிருந்தும் இவ் வைத்திய சாலையின் அத்தியாவசியமான தேவைகள் முற்றுகப் பூர்த்தி பண்ணப்பட முடியாதனவே.

இந்த நிலைமையைச் சற்றுச் சிந்தித்துத் தெல்லிப்பளைத் துர்க்காதேவி ஆலய நிருவாகிகள் அங்கு கூடும் பல்லாயிரக் கணக்கான பத்தர்களின் அன்பளிப்பின் பயனாக உள்ள கோயில் நிதியில் ஒருசிறு தொகையை யாழ்ப்பாணம் மாபெரும் வைத்தியசாலையில் அவசர சிகிச்சைக்குரிய அரிய உபகரணங்கள் அமைக்கப்படுவதற்காகும் விரயப் பணத்தில் ஒரு பங்கை உதவ முன் வந்தமை உதாரண தருமகைங்கரியம் ஆகும் ஐம்பதினாயிரம் ரூபா ஒரு சிறு தொகை. எனினும் அது அன்பளிப்பாகும் இக்குடாநாட்டின் மிக்க விசேட வைத்தியசாலையில் சேவை செய்வனே அமையப் பயன்பட உதவும் என்பதற்கையமின்று ஆலய பரிபாலனம் அறநெறியில் அமைவதே சாலச் சிறந்த சேவையாகும். இம்மைக்கும் மறுமைக்கும் இப் பணி யுரியதாக வேண்டும்.

பராபரையான பராசத்தியைப் பணிந்து நினைத்தனை காணிக்கை செய்யும் பல்லாயிரக்கணக்கான பத்தர்களின் அன்பினை விளைவு பனைத்துணையாகிப் பரவுகின்ற பெருங் கிருபையைப் புரிகின்ற துர்க்கா தேவியின் அருட் கோலம் இல்லற நெறியையும் துறவற முறையையும் ஒருங்கமைத்து ஆலய அறக்காவற் குழுவினரையும் நிருவாக நெறிப் பெரும் பொறுப்பேற்ற அடியார் குழாத்தையும் நற்றொண்டாற்ற அமைந்துள்ளது.

யாழ்ப்பாண உந்நத வைத்தியசாலையில் வைத்தியத் தொண்டாற்றும் கலாநிதிகளும் நிபுணர்களும் பரந்த மனப்பான்மையுடன் சேவை செய்வதுடன் அத்தியாவசியமானவற்றைப் பெற அரசநிதி ஒதுக்கப்படுவதை மட்டும் எதிர்நோக்கியிராது வள்ளல்களையும் வள்ளன்மை வாய்ந்த அறநிலையங்களையும் இப்பணியில் ஈடுபட வைத்தமை அரியதோர் முறையாகும். மேன்மை மிக்க துறைகள் மூன்றினுள் வைத்தியத் துறை ஒன்றென்ற உண்மையையும் வலியுறுத்தி விட்டனர் இந்த வைத்திய கலாநிதிகள்.

## அலங்காரத் திருவிழா

யாழ் கில்னர் ஒழுங்கை மகாமாரியம்பாள் அலங்காரத் திருவிழா வைகாசி 6 ஆம் நாள் 20-5-83 வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி 12 தினங்கள் நிகழும்.

## கருங்காலி காரைநகர் முருகன் கோயில்

காரைநகர் - கருங்காலி போயிட்டி ஸ்ரீ முருகன் கோவில் வருடாந்தத் திருவிழாவில் 21-4-83 முதல் திரு. கா. சபாரத்தினம், ஆசிரியர் த. தேவராசா ஆகியோரது தலைமையில் சைவப்புலவர் சு. வி. மகாலிங்கம் 'முருகன் பெருமை' எனும் பொருளில் உரை நிகழ்த்தினர்.

## உழைப்புக்கும்......

[3ம் பக்கத்து வளர்ச்சி]

தூங்கற்க, தூங்காது
செய்யும் வினைக்கண்
தூங்கற்க என்றும்

ஆராய்ந்து உரைத்த பொய்யா மொழியார் குடிசெயல் வகை என்றதைக் காட்டி "நல்லாண்மை என்பது ஒருவற்குத் தான் பிறந்த இல்லாண்மை யாக்கிக் கொளல்" என்னும் போது ஊக்கமும் அதன் வழி ஆக்கமும் நல்லாண்மையை நல்கும் என்று விரித்தனர் காண்க.

வினைஞனுக்கு மனக்கிளர்ச்சிவேண்டும். 'உடையர் எனப்படுவது ஊக்கம்' என்கின்றது குறள். இந்தக் கிளர்ச்சிக்கு நேர்மாறானது மனத்தளர்ச்சியென்னும் சோம்புதல். எனவே ஊக்கம் உடைமையைச் சொல்லி மடியின்மையை யுடன் அடுத்துச் சொல்லினர் வள்ளுவ நாயனார்.

'குடியென்னும் குன்றா
விளக்கம் மடியென்னும்
மாசூர மாய்ந்து கெடும்'

சோம்புதல் என்னும் இருள் ஊக்கத்தால் வரும் எழுச்சியாம் ஒளியைமடித்து விடும்.

ஆகவே தொழிலின் எழுச்சிக்குரியதாய் ஒரு நாளைக் குறித்துக் களிபேருவகை கொள்ளுதல் பொருத்தம். அது அரசியலுக்கப்பாற்பட்டது. உலகம் உய்ய வேண்டின் ஒவ்வொருவரும் உழைக்கவேண்டும். இந்த உழைப்புக்கு ஒரு ஒழுக்க நெறியுண்டு உழைப்போர், உழைக்க வைப்போர் என்று இரு வகையினர் என்ற நிலைமையில் ஒருவருக்கொருவர் தருமநெறி உணர்ச்சி உண்டாகவேண்டும் வினைத் தூய்மையை இருசாராரும் உணர்ந்தால் விபரீதம் எழமாட்டாது. வேலை நிறுத்தம் எனவும் சோம்புதல் தோன்றாது. தொழிலின் விலை மதிப்புத் தானாகவே எழவேண்டும். தொழில்புரிவோரைத் தன் புறத்தி தொழில் செய்விப்போர் எழுதல் எத்துணைப் பழி? இந்த இடத்திலேதான நடுவர் குறுக்கிட்டு நீதியை நிலைநாட்ட வேண்டும்.

"உழவும் தொழிலும்
உயர்வென எண்ணு-
உலகம் உய்ய
ஒருவழியிது நண்ணு"

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

துந்துபி ஞு பங்குனி மீ
18 • 1-83 15-4-1983, வெள்ளி

## வழியுரைக்கும் தொண்டில் வளரும் யாம்

...o0o...

இந்துசாதன நங்கை உருதிரோற்காலி ஆண்டை ஈரே வற்றுரைக்க எண்ணும் இப் பொழுதில் யாம் ஓர் தூதவர் என்றும் எங்கள் அது இவ்வுலகுக்கோர் சைவத் தூதாகும் என்றும் உள்ளத்தில் உணர்ச்சி யுற்றெடுக்கின்றது.

அதென்றால் வழியுரைப் பதென்று தொன்னூல் தொகுத்த வள்ளுவனார் சொல்லிப் போந்தனர். அதற்குரிய பண்புதான் யாதோ? "தூய்மை துணைமை துணிவுடைமை இம் மூன்றின் வாய்மை வழியுரைப்பான் பண்பு"

சைவ நெறியை உள்ள வாறெடுத்துத் தாரணி மக்களுக்குச்சொல்லும் அதினைச் சைவ பரிபாலன சபை 'இந்துசாதனம்' மூலமாகச் செய்து வருகின்றது.

வேத சிவாகம மெய்ம்மையையும் முப்பொருள் உண்மையையும் தொன்று தொட்டு நின்று நிலவும் சான்றோர் நெறிப்படி உரைக்கும் தொண்டில் வேறுபடக் கூறுமையாற் பெறும் தூய்மையையும்உற நோக்குவார்க்கு சுற்றமாமையும் துணைமையும். மெய்ப்பொருள்சொல்வதிற் றுணிவுடைமையும் இவற்றுடன் யாதொன்றும் தீமையிலாத செயல் என்னும் மெய்ம்மையையும் பண்பாகக் கொண்டே சாதன நங்கை போதனை செய்கின்றாள்.

நூல்கள் என்ற நுண் பொருட் களஞ்சியத்தை உறு துணையாகக் கொண்டெழுவன. ஏனைய வெளியீடுகள். இவை நாள் ஏடாகினும், வார இதழாகினும் திங்கள் ஆண்டு மலர்களாகினும் எழுது வார்க்குரிய நெறிக்கமைய வேயிருத்தல் வேண்டும்.

காலையில் ஒவ்வொருவரும் காசினியில் என்ன நடைபெறுகின்றது என்று அறிய வேணவாக் கொண்டு நிற்பர். அவர்களுக்கு நாளேடுகள் செய்திகளை வாரி வழங்க வேண்டும் நன்மையானவையும் தீமையானவையும் ஆங்கு வெளிவரும். கொலை கொள்ளை கொடுமை நிகழ்ந்தன என்று சொல்லத்தான் வேண்டும் ஆனால் அவ்வாறு செய்தி அமைக்கும் பொழுது இப்பழிச் செயல்கள் என்றமையுள்ளன. இவற்றால் ஏதம் எதுவும் இல்லை என்று தோன்றப் பாவ நிகழ்ச்சிகளைச் சோடித்துச் சொல்லுதல் ஒருவகை. இதில் உவகை உறுவாரும் உளர். நடந்ததை அப்படியே வெளிப்படுத்துவர் இன்னொருசாரார். இதற்கிடையில் மங்கலமான மங்களமான நிகழ்ச்சிகளும் இடம் பெறும், இடையிற் சமயச் செய்திகளும் அறிவுரைகளும் அமையும்.

ஆனால் எங்கள் தூதோ, வானுடர் காணாத மன்னையும் அவரை வழிபடுதலையும் அதன் வழியுள்ள அறநெறியையும் மட்டுமே வழியுரைக்கும் பான்மையது. மறந்தும் தீயவை எழுதப் படமாட்டா. எழுதினும் ஏந்திரம் அச்சேற்ற மறுத்துவிடும். திருமுறைகளையும் அவற்றைத் திருவாய் மலர்ந்த திருத்தொண்டர்களையும் அன்னவர்களைப் பின்பற்றிச் சமயிகளாயிருப்பார்களையும் எடுத்துக் கூறுவதே எங்கள் இதழின் இன்பம். சொல்லும் பொழுதெல்லாம் நல்ல தமிழிலேயே அமையும். செந்தமிழின் தீஞ்சுவையைச் சுவைக்கும் வகையிலேயே இந்தத் தமிழ்மொழி வளம் இயங்கும்.

இலக்கணம் இலக்கியம் என்ற கலை வரம்பு காட்டி எழுதுவதை நாவலர் ஐயா அழுத்தி நின்றார். அந்த அச்சத்துடனேயே எங்கள் ஏடு நடமாடும்.

எழுத்தில் இழுக்காகாது சொற் சோராது ஒழுக்கம் உடையார் வாய்ச் சொல் யாவும் ஓராகின்று பேதைமைச் சொல் யாதும் இன்றி ஏனைத்தானும் எல்லோரும் நலமவையையே கேட்கப் புனைந்துரைத்து தீதொரீ நன்றின்பால்நோக்குஎழும் உணர்ச்சியை உண்டாக்குவதே சாதன நல் நங்கையின் நாதனம்.

நாம் வழியுரைக்கும்பொழுது பழுதுரைக்கோம் என்ற உறுதியை மீண்டும் சொல்லி மேலும் இத்தூது மெய்த் தூதாகப் பொலியவும் மேன்மைகொள் சைவ நீதி உலகெங்கும் விளங்கவும் இறை ஒளி என்றும் நிலவவும், எம்பிரானை இறைஞ்சுவோமாக.

---

## சைவமாம் சமயம்

[1 ஆம் பக்கத்து வளர்ச்சி]

என்றும் கட்டு என்றும் குறிப்பிடுவர்.

இவை மூன்றையும் ஒருங்கு சேர்த்து முப்பொருள் என்பர். என்றும் உள்ளன இவை என்பதனால் உண்மையானவை என்று சுட்டிக் காட்டப்படுகின்றன.

உயிர் அழியாது என்ற உண்மையையும் நாங்கள் உணர்ந்தே அறிகின்றோம். அவ்வாறே இறைமையும் பாசத்தையும் உணர்ந்து கொள்கின்றோம்.

(வளரும்)

---

# அப்பர் சுவாமிகள் குருபூசை 7-5-83

## சைவபரிபாலனசபை நாவலர் ஆச்சிரமமண்டபத்தில்

சைவ உலகைப் 'பரந்தெழுந்த சமண்முதலாம் பரசமய இருளில்' மூழ்கிவிடாது காப்பாற்றிய சமய குரவரில் மூத்தோராகிய திருநாவுக்கரசு நாயனாரின் குருபூசை யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை ஆதரவில் சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் 7-5-83 சனிக்கிழமை (சித்திரைச் சதயம்) முற்பகல் 9 மணி முதல் சிறப்பாகக் கொண்டாட ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

x x x

## நல்லை ஆதீனத்தில்

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் 7-5-83 சனிக்கிழமை அப்பர்பெருமான் குருபூசை வழிபாடு நிகழும். 'அப்பர் கண்ட கைலைக் காட்சி' எனும் பொருளில் திருமதி வசந்தா வைத்தியநாதன் மாலை 5-30 மணிக்கு சிறப்புச்சொற்பொழிவு நிகழ்த்துவர். சங்கீதபூஷணம் சி. பாலசிங்கம் பண்ணிசை நிகழ்த்துவர்,

x x x

## வெயிலுகந்த விநாயகர் கோயிலில்

யாழ். நல்லூர் - நாயன்மார்கட்டு வெயிலுகந்த விநாயகர் கோவிலில் கலைப்பிரியா முத்தமிழ்மன்றத்தின் ஆதரவில் அப்பர் சுவாமிகள் குருபூசை கொண்டாடப்படும். 7-5-83 சனிக்கிழமை நிகழும் இவ் விழாவில் பண்ணிசை சிறப்புச்சொற்பொழிவு ஆதியன நிகழும்,

---

# திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களுக்கு

# குருவணக்க வாழ்த்துரை

சுன்னாகம் சந்திரசேகரப் பிள்ளையார் கோயில் ஆண்டுப் பெருவிழாக்கள் நடைபெற்றபொழுது ஒவ்வொரு இரவிலும் தொடர் இன்னிசைக் கதையுரை செய்து அடியார்களை மகிழ்வித்த வீரசைவத்திருவாளர் திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களுக்கு இந்துசாதன ஆசிரியர் நம. சிவப்பிரகாசம் ஆற்றிய வாழ்த்து நன்றிப் பாவுரை,

சந்திர சேகரரின் தந்திமுகம் சார்முகூர்த்தம்
சிந்தை திகழ்த்தும் திருத்தலத்தில் முந்துசைவச்
சிரியார்க்கும் செந்தமிழ்த் தேனொழுகத் தித்திக்க
வாரியார் வாய்ச்சொல் வளம்,

பாரினிலே பண்பும் பழஞ்சைவப் பாங்கெலாம்
நேரினிலே நீள்சொல் நிகழ்த்தும் — சீரினியல்
யாரிங்கு யாதறிய ஆள் கிருபானந்த
வாரியார்போல் வல்லுநர் வாய்ப்பு.

திருப்புகழ்த் தேனமுதம் தீந்தமிழ்ச் சீரில்
விருப்புடன் மெய்ம்மை விளக்கி — உருப்படியாய்த்
திக்கெட்டும் திகழ்தமிழ்ச் சேவை திருமுருக
மங்கள வாரியார் மாண்பு

வாழ்க வையகம் வாழ்க வைதிகம்
வாழ்க மாரியும் வாழ்க மாதரும்
வாழ்க வேதியர் வாழ்க செந்தமிழ்
வாழ்க வாரியார் வாரி வழங்கவே

---

## மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் மூன்றும் நாள் பெருவிழா

திருப்பொலிவுடன் வேலக்கைப் பிள்ளையார் கோயிற் பெருவிழாக் காலமான புண்ணிய வேளையில் பக்திசெறி அபிடேகம் திருவுலா நிகழ்ச்சிகளின் போது அருட்பேற்றிற்குரிய சற்பிரசங்கமும் வேண்டற் பாலதென்று நாவலர் பெருமானின் வியமப்படி சைவ சித்தாந்தச் செந்நெறிச் சாதனை பற்றி இந்துசாதனம ஆசிரியர் நம. சிவப்பிரகாசம் அவர்கள் 17-04-83 இரவு அடியார்களின் பேரவையில் உரையாற்றினார், திருமுருகனடியாராம் அன்பர்கள் சுவாமி தரிசனத்தின் முழுப்பேற்றையும் அனுபவிக்க வழிவகுக்கும் இந்த சற்பிரசங்கத்தைக் கேட்டு மேலும் சமயாபிமானச் செம்மையுறத் திருவருள் பாலிப்பதாக என்று இத் திருத்தலத்தர்மகர்த்தா திரு. சி. இராசேந்திரம் (சைவ பரிபாலன சபைத் தலைவர்) நன்றி பாராட்டினார்.

இத்திருத்தலத்தில் கிரமங்கள் முறையாக நிகழ்கின்றன. ரதோற்சவமும் தீர்த்த விழாவும் 26-04-83 சிறப்பாக நிகழ்ந்தன. ——

---

# உழைப்புக்கும் அதன் உயர்ச்சிக்கும் ஒரு உலக தினம்

அனைத்துலகும் மேலைத் தேசப் பஞ்சாங்கக் கணிதப்படி ஆண்டின் ஐந்தாம் மாதத்து முதல்வது நாளை உழைப்பின் உயர்ச்சிக்குரிய நாளாகக் கொண்டாடி வருகின்றது யார் இந்த எண்ணத்துக்குக் கர்த்தா என்று ஆராயத் தேவையில்லை;

எவர் ஒருவர் உழைப்பின் உறுபயனைப்பற்றி உற்று நோக்கி அதன் எழிலை எடுத்து ஏனையோரும் அறிந்தின்புற வைத்தாரோ அவரின் புனிதமான நோக்கம் புவிமீது பொலிந்து பரவி விட்டதென்றரை நினைவுகூருதல் நன்றியுணர்ச்சியாகும்.

ஆனால் ஒவ்வொரு இனமும் தொழிலைப் பற்றித் தொன்றுதொட்டுத் தனது மொழி நூல்கள் வாயிலாக எத்துணர்ந்து உவகை கொண்டிருந்த தென்பதை அந்நூல்கள் மூலம் யாம் அறிகின்றோம்.

தமிழ்மொழி நூல்கள் காலத்தால் முற்பட்டவை; அவற்றிலே தொழிலின் எழிலையும் அதனால் விளையும் இன்பத்தையும் கருத்துறப் பொழியும் கவிகள் பலப்பல இருக்கின்றன, தனி நூல்களும் பல உள.

தொன்மைமிக்க தொல்காப்பியமும் அதன் பின் எழுந்த நன்னூலும், செழுமை விழுமிய திருக்குறளும் அதைத் தொடர்ந்த நலடியாரும் சங்கப்புலவர்களின் தலைசால் படைப்புகளும் எல்லாம் முயற்சி என்ற எழுச்சியில் விளையும் தொழிலைப்பற்றி கூறிக் கூறிப் படிப்போரைக் குதூகலிக்கச் செய்தன

ஏர் எழுபது கார் நாற்பது போன்ற நூல்கள் தொழில் யாவற்றுக்கும் ஆதியாகும் பயிரிடுதலுக்குரிய ஏரைப்பற்றியும் ஏரின் உழவரைப் பற்றியும் விசேடித்துரைக்கின்றன

சிலப்பதிகாரம் போன்ற காப்பியங்கள் பல வேறு தொழில்களை விதந்து காட்டியிருக்கின்றன

முயற்சி திருவினையாக்கும் என்ற திருவள்ளுவனாரின் சுலோக நயத்தை ஆழ்ந்தாராயின் தொழில் என்பது படைக்கப்பட்டவற்றைப் பாதுகாக்கவுள்ள ஒரு ஏது எனபது புலப்படும்.

வினைநலம் வேண்டிய எல்லாம் தரும் என்றும், வினைத் திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம் என்றும்

(வளர்ச்சி 5ம் பக்கம்

# 'வெண்ணீறணிகிலாதவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சுமாறே''

( முப்பொருள் வித்தக நூலாசிரியர்
மு. இளையதம்பி )

விபூதி எல்லாப் பாவங்களையும் எரித்து சாம்பலாக்கி விடுகிறது: காமவினைகள், பந்தபாசங்கள், மனச்சஞ்சலங்கள், ஆணவம் ஆகிய எல்லாம் வலி இழந்து விடுகின்றன. திருநீற்றைத் தரித்த மாத்திரத்திலே முகத்தில் ஒரு பிரகாசம் ஏற்படுகிறது. அது ஒரு ஆன்மீக வளர்ச்சிக்கு அறிகுறி ஆத்மீக முன்னேற்றத்தை விரும்பி நிற்கும் பக்தர்களின் நெற்றியில் பொலிவும் தேசும் விளங்குகின்றன. அகமும் புறமும் ஆனந்தத்தைக் கொடுக்கும் தன்மை விபூதிக்கு உண்டு வெளி உலகில் நமக்கு ஏற்படுந் துன்பங்களையும் ஆன்மீக சாதனைக்கு ஏற்படும் இடையூறுகளையும் விபூதி நீக்க வல்லது கெட்ட எண்ணங்களிலிருந்தும் தீயவர் கூட்டங்களிலிருந்தும் அது நம்மைப் பாதுகாக்கிறது.

இந்த உடம்பு நிலையில்லாதது இவ்வுலக வாழ்வு நீர்க்குமிழி போன்றது அழியும் தன்மையுடையது திருநீறு அந்த உண்மையை ஞாபகப்படுத்துகிறது. இந்தச் சரீரம் சிவன் ஆலயமாகிறது. இந்த உடம்பில் திருநீற்றைப் பூசுவதால் சிவன் கோயிலுக்குச் சென்று வழிபடுவது போலிருக்கும் திருநீறு ஒரு கவசம் போன்றது. விபூதி கவசம் நமக்கு எப்போதும் பாதுகாப்பு அளிக்கும் இதனையே திருமந்திரம் விளக்குகின்றது.

„சங்கார வலி பூசும்
கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி
மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளுஞ்
சாரும் சிவகதி
சிங்கார மான
திருவடி சேர்வரே.

விபூதி பூசும் போதெல்லாம் பஞ்சாக்கரத்தை ஓதிப் பூச வேண்டும். 'திருவாய் பொலியச் சிவாயநம என்று நீறணிந்தேன்' என்ற நாவுக்கரசர் கூற்றை நினைவு கூரவேண்டும், „சிவ சிவ' என்று சொல்லி நீறணிய வேண்டுமென நாவலர் பெருமான் கூறியிருக்கின்றார் சிவநாமத்தைக் கூறி விபூதி அணிவதால் அச் சிவ சின்னம் சிவனை நினைவு கூரச் செய்கிறது திருநீற்றினாலே ஞானசம்பந்தர் பாண்டியனுடைய சுர நோயைத் தீர்த்து திருநீற்றின் பெருமையை விளங்கச் செய்தார். கூன் பாண்டியனுடைய கூன் நிமிர்ந்ததும் விபூதியினாலேயாம்.

'வேதத்திலுள்ளது நீறு
வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு

புன்மை தவிர்ப்பது நீறு

இறைவன் திருவடியைச் சாவதற்குத் தடையாய் இருக்கும் ஆணவ மலத்தின் (புன்மை) தீர்ப்பதும் வேதத்தில் பெருமையுடன் பேசப் படுவதும் திருநீறும். வருத்தந் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு என்று திருநீற்றுப் பதிகத்தில் கூறிய கருத்தும் இதுவேயாகும்.

உயிர்கள் உய்வதற்குக் காவலாயுள்ளது திருநீறு என்று விளக்குவதற்காக அவ் வெண்ணீற்றை சிவபெருமான் அணிந்து கொள்கின்றார், விபூதி தரித்தவ ஞானக்கியினால் ஆன்மாவின் மலம் நீங்கும் காலத்தில் கிடைக்கும் சிவபேற்றிற்கு அறிகுறியாகும் திருக்கூட்டச் சிறப்பை விபரித்த கூறுமிடத்து சேக்கிழார், அரந்தை தீர்க்கும் அடியவர் மேனி மேல், நிரந்த நீற்றொளியால் நிறைதாமையால் எனக் கூறி இவ்வடி யார் வெளியில் என்றும் விளங்கும் நீற்றின் பெருமையை எடுத்துக் கூறுகிறார்.

சைவ சமயிகள் கவனிக்க வேண்டிய ஆசாரங்கள் பலவுள அவைகளுள் விபூதி அணிவது முதற் கடமையாகும் சைவ சமயத்தவர்களுடைய நெற்றியில் எப்பொழுதும் விபூதி காணப்பட வேண்டும் 'நீறில்லா நெற்றி பாழ்' என்பது ஆன்றோர் வாக்கு. அரும் பெரும் பயனை அளிக்கின்ற திருநீற்றைப் பூசும் பழக்கத்தை மக்கள் தவறாது அநுட்டிக்க வேண்டும். ஸ்நானஞ் செய்து விபூதி அணிந்து புனிதமான இடத்தில் அமர்ந்து சிவ மூல மந்திரமாகிய பஞ்சாட்சரத்தைச் செபிக்க வேண்டும். தீட்சை பெற்றோர் பஞ்சாட்சரத்தைச் செபிப்பதற்கு முன் உடம்பில் 16 இடங்களில் விபூதியைத் திரிபுண்டரமாக அணிந்து கொள்வர்.

கோயிலிருந்து திரும்பும் போதும் கொண்டு செல்வது திருநீறாகும் சிவ பக்தன் ஒருத்தரால் அவரிடம் பெற்றுக் கொள்வது திருநீறாகும். ஒரு நோயாளியைப் பார்வையிடும் பக்தன் கொடுக்கும் திருநீறு மருந்தாக அமைகிறது. ஒரு ஞானி தன்னுடன் கொண்டு செல்வதும் திருநீறாகும். பலர் பலர் கூடி இருக்கும் ஒரு இடத்தில் சைவ சமயத்தரென்று ஒருவரை அறிந்து சொல்வது நெற்றியிற் காணப்படும் விபூதியைக் கொண்டேயாம். நெற்றியிலுள்ள விபூதி ஒருவருக்கு முகத்தில் தேசு விளங்கச் செய்கிறது சிவ பக்தன் அணிவது திருநீறாகும்: சிவபக்தன் உள்ளும் புறமும் புனிதனுவான விபூயே அப்புனிதத் தன்மையை அளிக்கிறது. ——

## வித்துவசிரோமணி சி. கணேசையர் நினைவுவிழா

டி. விழா தெல்லிப்பழை வருத்தலை விளான் மருதடி விநாயகர் ஆலயத்தில் தமிழ்ப் பேரறிஞர்கள் சமயப பெரியார்கள் கலந்துகொள்ளச் சிறப்பாக நடைபெற்றது. விழாவுக்கு இலக்கண வித்தகர் பண்டிதர் நமசிவாயம் தலைமை தாங்கினார்.

வண்ணை வைத்தீஸ்வரா முன்னாள் அதிபர் திரு சி. அம்பிகைபாகன் அறிமுக உரை நிகழ்த்தினார்.

''இந்துசாதனம்'' ஆசிரியர் சைவபூஷணம் திரு நம சிவப்பிரகாசம் அவர்கள் கருத்துரை வழங்கினார் கணேசையர் நினைவுப்பணி மன்றத்துணைத்தலைவர் திரு ச. விநாயகமூர்த்தியின் சொற் பொழிவை யடுத்து யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் துணைவேந்தர் கலாநிதி சு. வித்தியானந்தன் கணேசையர் பற்றிய நினைவுப் பேருரை நிகழ்த்தினார்.

ஐயரவர்களால் இயற்றப்பட்ட கவிதைகளை திரு க. சிதம்பரநாதன் திருமதி பூபதி நாகராஜன் ஆகியோர் இசை மழையாகப் பொழிந்தனர்.

விழா முடிவில் கட்டுரைப் போட்டியில் முதன்மைகள் பெற்றவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன. ——

## பொன் விழாப் பொலிவு பூணும் அகில இலங்கைச் சைவ மகாசபை

### கந்தபுராண விழாவின் கவினும் அமைகின்றது

ஐம்பதாண்டுகள் ஓர் சபைக்கு வாலிபப் பருவம் வளர்வயதுப் பொலிவைக் காட்டும் திசைக்கருவியாக அமையும், மூப்பினால் முன்னோரின் யாப்பினால் முன் வரிசையில் நிற்பது யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை. அடுத்த படியிற் சிறுமை தொடுத்து விளங்குவது சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாசம் (பெருமன்றம்) மூன்றாவதாக முன்னேக்குவது அனைத்துலக சைவ மகாசபை

இளமை வயதில் இயங்குவது கீரிமலை சைவநெறிக் கழகம் வெள்ளிவிழாக் கண்டுமேலோங்கும் சிறப்புடையது மாவை முத்தமிழ் மன்றம்.

இன்னும் சைவப்பணி யாற்றும் பெரும் சபைகளுள. அவை தனிப்பட்ட சமய போதகர்களின் நாமங்கொண்டியங்குவன. அவற்றுள்ஒன்று கொழும்பு விவேகானந்தசபை

பழம் சபைகளின் பணியைப் பாராட்டுவது சமயிகளின் பாலுள்ள கடமை.

இவ்வகையிலே சைவ மகா சபையின் பொன் விழா மாவைப் பதியிற் பொலிந்தது. ——

## துர்க்காபுரம் பேருந்து நிலையத் தொடக்க வைபவம்

தெல்லிநகர்த் துர்க்காதேவத் தான இந்த இளைஞர் சங்கத்தின் அரிய சிரமதானத் தொண்டின் பயனாக அமைக்கப் பெற்ற அழகான பேருந்து நிலையம் சித்திரை 4ம் நாள் ( 17-4-83 பிற்பகல் துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தலைமையில் யாழ். திவ்விய ஜீவன சங்கத் தலைவரும் வட பிராந்திய போக்குவரத்து சபைத் தலைவரும் ஆகும் சட்டத்தரணி இ. கனகரத்தினம் அவர்களாலேதிறந்துவைக்கப்பட்டது சிவநெறிப் புரவலர் க. கனகராசா அவர்கள் ஆசி உரை கூறினர். திரு. கனகரத்தினம் அவர்கள் இந்த நிலையம் இளைஞர்களின் ஆற்றலுக்கோர் எடுத்துக் காட்டென வியந்தனர். துர்க்கா துரந்தரி அவர்கள் இந்த அமைப்புக்குத் தெய்வீக உணர்ச்சியும் மனிதாபிமானமும் முக்கிய காரணமாகும் என்றனர். சங்கத் த வர் ந. சிவபாலகணேசன் வரவேற்புரை யாற்றினர் இவ்வைபவத்தைத் தொடர்ந்து இந்த இளைஞர் சங்கத்தின் 17ம் ஆண்டு நிறைவு விழா நிகழ்ந்தது.

தலைமை. சிவத்தமிழ்ச்செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். பிரதம விருந்தினர்கள்: வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரம் அவர்கள் மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி காங்கேசன்துறை வைத்திய கலாநிதி திருமதி தெய்வேந்திரம் அவர்கள் யாழ் அரசினர் வைத்தியசாலை. ஆசியுரை சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள் அவர்கள் ஆலய பிரதம சிவாசாரியர் பிரமஸ்ரீ வ. குகசர்மா அவர்கள் சங்கக் காப்பாளர் சொற்பொழிவு ''சமயத்தில் இளைஞர்களின் பங்கு'' என்னும் பொருள்பற்றி திரு. ச. விநாயகமூர்த்தி, B. A அவர்கள் விரிவுரையாளர் யாழ். வளாகம் நன்கு நடைபெற்றன.

## சிவன் மேய செல்வத்திருநாரையூர் கைதொழவே சிந்தை பெருகும், தனம் வரும், நன்மையாகும்

செல்வத்திரு சிவந்திகழும் இடமெல்லாம் செறியும் என்பது திருமுறை தரும் கருத்து: கடவுளைக் கைதொழுதலே மக்கட்பிறவி எடுத்தாரின் கடமையென கற்றறிந்தோர் எடுத்துக்காட்டியிருக்கின்றனர்.

திருச்சிற்றம்பலம்

தனம்வரும் நன்மையாகும் தகுதிக்குழந்து வருதிக்குழன் றகடவின்
இனம்வள ரைவர் செய்யும் வினயங்கள் செற்று நினைவொன்று
சிந்தை பெருகும்
முனமொருகாலம் மூன்று புரம்வெந்து மங்கச்
சரமுன்றெரிந்த அவுணர்
சினமொடு காலழித்த சிவன்மேய செல்வத்திரு
நாரையூர் கைதொழவே

இத்தலத்தில் நாரை சிவபெருமானை நாடொறும் பூசித்து நல்லருட்பெற்றமையால் இவ்வூரை நாரையூர் என்பர். இரண்டாந் திருமுறையிலுள்ள இப்பதிகப் பண்பியந்தைக்காந்தாரம்

அபிராமிப்பட்டர் அபிராமியம்மையை அயராது வழிபட்டு அன்பனுகி அருள்பெற்றுப் பாடிய பதிகப் பாடல் ஒன்று

தனந்தரும் கல்வி தருமொரு நாளுந் தளர்வறியா
மனந்தருந் தெய்வ வடிவுந் தருநெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தருந் நல்லன வெல்லாந் தருமன்ப ரென்பவர்க்கே
கனந்தருந் பூங்குழ லாளபி ராமி கடைக்கண்களே

கடைக்கண்பார்வை கடவுள் நல்குவாரேல் கல்வி முதலாம் நல்லனயாவும் எய்துமென்றனர் ஆனல் அன்பர்களுக்கே இந்தக் கடைக் கண் கிருபை மெய்தும் என்ப தேயுண்மை. அன்பு வளர ஆலயந் தொழல் வேண்டும்.

## தெப்பத் திருவிழா நிகழ்த்தும் தெய்வீகக் கவின்

———0———

தொன்மைச் சிறப்புடைய சிவாலய விழாக்கள் யாவும் இறைவனின் இன்னருளைச் சோதி ஒளி சுருத்து அலங்கார அணி மூலம் அடியார்களுக்கு காட்டும் ஒழுங்குகளை நினைவுறச் செய்யும் பான்மையிலே சென்ற சித்தாமணி வார இதழிலே ஆசிரியர் சி. த. சிவநாயகம் அவர்கள் திருமலைத் தெப்பத் திருவிழாப் பொலிவினைக் கூர்மையாகக் கண்ணுற்று நேர்மையாகச் சொல் ஓவியத்தில் உருவமைத்திருக்கின்றனர். தென்னாட்டுத் திருத்தலத் தெப்பக்குளத் திருவிழாக்களுடன் ஒப்பு நோக்கித் திருவருட் பொலிவுடன் கோணேசர் மாவாயில் நவ ரத்தின ஆரோகணித்துக் குண திசைக குரைகடல் அலைதரு பொலிவில் ஆனந்த காட்சி அடியார்க் களிக்கும் அற்புத நிகழ்ச்சி, புத்தாண்டு அர்ச்சனையாகப் பொலிந்ததை ஆசிரியர் நன்கு அமைந்திருப்பதைப் பார்த்ததும் இத்தகைய தெப்பத் திருகாட்சி மாவைக் கந்தனுக்கு வட பால் முனிவர்கள் இருடிகள் ஸ்ரீஇராமர் முதலிய பேரடியார்கள் நடமாடிய கசிங்கேயன் முங்கீர் முகப்பிலும் நயினை நாகபூஷணி யம்மைக்கு ஏழ்கடல் சூழ் ஆழியில் விண்மீன் யாவும் தாழ்ப்படிந்து ஒளியணி அமைத்தாங்கு விரவு பிரபையிலும் உள்நெக குருக அடியார்களுக்குக் கண்ணுக்குத் தெய்வீக விருந்தளிக்கும் நிகழ்ச்சியாக யாண்தோறும் அமைவது நினைவுகெழுந்தது.

திருகோணேஸ்வரத்தின் சீரும் சிறப்பும் திருஞான சம்பந்தப் பெருமானுக்குச் செய்மையில் நின்றே கண்ணெதிரிலேதோன்ற நின்றன வென்றால் அருகமைந்த அருள் அமுதத்தைப் பருகும் பாக்கியம் பெற்றவர்கள் வாழ்க்கைப் பயனைப் பெற்றனர் ஆவார் என்பது திண்ணம்.

ஆசிரியர்சுட்டிக்காட்டியது போலத் திருப்பணிச்சபையும் அதன் செம்மைக்குக் காயாயிருக்கும் தலைவரும் இந்த வரலாற்று மாண்புடைய திருக்கோணேஸ்வரத்தின் புனர் அமைப்புப் பொலிவுக்கு அயராதுழைக்கின்றனர் என்பது சைவ மறுமலர்ச்சிக்கு ஒரு அறிகுறியேயாகும். துர்க்கா தேவத்தானத் தொண்டும் இத்தகைய தொன்று.

# STALWART SAIVA DEVOTEES WHO SHAPED THE SABHAI AT THE START

**President:**
Vidvasiromani N. S. Ponnampalapillai

**Vice Presidents:**
Sri T. Chellappah Pillai
Retired Chief Justice, Travancore Supreme Court

S. Nagalingampillai - Advocate

**Secretary:**
Shri V. Kasippillai - Crown Proctor

**Assistant Secretary:**
Shri T. Kailasapillai,
(Arumuga Navalar's Nephew)

**Treasurer:**
Shri ST. M. P. Pasupathi Chettiar

**Auditor:**
Shri S. Sabaratna Mudaliyar

**UNOFFICIAL MEMBERS**

Bhrama Sri. V. Sabapathi Kurukkal
Sri. M. Kanesa Pandithar
" A. Sabapathy (Later M. L. C.
" S. Sabapathypillai
" K. Ponnampalapillai
" V. Kanagaratnapillai
" A. Thillalampalapillai
" K. Selvanayahampillai
" M. Vaithialingapillai
" A. Chinnappahpillai
" R. Mailvaganampillai
" E. Marimuthu Upaththiyayar
" A. Subramaniapillai
" S. Shanmugampillai
" V. Muthuvelupillai

HINDU ORGAN
Fri. 18, 25-3-83
1, 8, 15-4-83

## RELIGION ALONE is a Reassuring Agent

That cycle of twelve lunar months bearing the name of Thunthupi having made a complete turn, now the same order entitled 'RUTHIRAUT-KARI' has started its natural operation.

One of the many mysterious customs that keep humans conscious of a systematic set-up, the concept of the dawn of a New Year, is certainly a congenial trend in the affairs of man. Always afflicted with the mysteries of life, man is compelled to yearn for lasting relief. This feeling makes him realize the value of religion which alone has the capacity to reassure the confounded with resurging hope.

Our readers would have been amused to learn from the newspapers that in the NORTH there has been instituted in the Courts an action for a declaration that the slaughter of cattle in the Holy Premises of Temples is a custom of the Hindus and that the perfomance of this (cruel) activity should not be prohibited. Alongside of this information, we also find that a serious call has been made by fervent religious associations for not merely the banning of slaughter of animals but also for imposing sanction against those who commit this sin. In fact these persons belong to the Sister Faith, Buddhism

We need not labour to make it clear that the killing of beings for any purpose, not to speak of the need for satisfying human appetite, is an atrocious act that affects the very concept of religion

In this context we invite the attention of the Hindu Public to that inspiring legislation so thoughtfully initiated by the Minister for Hindu Affairs — namely the Act Prohibiting the Slaughter of animals in places of worship. While a large number of Hindu Shrines had enforced this prohibition even, before the said Act was promulgated others that were continuing this irreligious practice, have also realized the wisdom of this purposeful piece of legislation. This is as far as the sacrifice of beings in Shrines is concerned.

We cannot overlook the other aspect of this question - the consumption of flesh, meat and eggs. Time ant oft we had drawn the attention of the Hindus to the fact that the incidence of killing animals for food had become more extensive and intensive. Not merely stray cattle, but even those animals protected in private house - holds, are either stolen or purchased to be slaughtered for the pleasure of appeasing the brutish appetite of human beings

Our New Year message is simply this. Hindus who certainly have abiding faith in their religion and who have by strange customs imposed on them by strangers become abettors in the commission of the slaughter of animals, at least on this religious occasion of the heralding of a NEW YEAR, should take time to think hard and resolve in all sincerity and serenity that no more they would consume non-vegetarian diet.

Man has been set thinking because man has fallen from grace. All those priceless principles that had guided humans for ages seem to have been forgotten, nay denied in the unholy struggle for existence at any cost. In the midst of this misconception, we, however, do not fail to observe religious days. But, this observance is certainly not in the manner of the accepted Principles; it has become a stereotyped custom whatever the background may be.

On the hope-ful occasion of the NEW YEAR we feel obliged to do some serious thinking.

## HINDU JOURNALS — HISTORY MAKERS

Shri A. Sabapathipillai that veteran journalist, legislator and prominent social worker edited the Hindu Organ from 1890 — 1924 for thirty-four long years guiding the people of this historic Isle in their religious, political and social life. As the only newspaper of that time published in Jaffna, this journal was well received every where including Malaysia and Singpore

As Member in the Legislative Council representing the Tamils; Editor Sabapathipillai utilized the pages of the Hindu Organ in furtherance of the full - throated campaign for self - rule under the distinguished leadership of Sir P. Ramanathan and Sir P. Arunachalam of whom the former once graced the chair of the Saiva Paripalana Sabhai.

Pandit V. T. Sambandhan (Veluppillai Thirugnanasambanda Pillai) was the idol of Tamil Journalists. The eldest son of that Scholar Madduvil, Vetpillai Upaththiyayar - Commentator and Teacher, Sri Sambandhan soon got into his natural stride of lucid journalism and embellished the pages of the "Intusathanam with his wit, humour, satire and learned expositions of Saiva Literature.

He was Editor of this Journal from 1920-1.51 31 years always to be remembered.

## Eye - Sore - That is The Jaffna Esplanade

The majestic landscape of the Northern Peninsula of our Ancient Isle has been the subject of complimentary comment by all historians of the past. The lisping waters of the lovely lagoon fringed, on either side by the perennial palmyrah, the specks of tiny islets skirting along the South Western sea-fringe the towering "Gopurams" of ancient temples and of course the three century - old fort girdled by symbolic dykes embroidered the southern, stretch of this small Pen insula in such loveliness that the natural setting was in a way an indication of the cultural eminence of the people who inhabited the area In this gift of nature the hand of the city-planner of old also played a conspicuous part. The laying of the esplanade, the cross - cutting streets the huge trees - Margosa and Tulip providing shade and shelter under the tropical sun had been a delightful design making the Northern Capital look remarkably majestic

This was the scenic beauty that obtained in the glorious past; gone are those delightful days, gone are those shade trees, gone are the green pastures that embellished the ESPLANADE, where the sight of grazing cattle also afforded great pleasure. There is now nothing for even a stray animal to graze. All that was the Esplanade has been erazed What remains is a rugged ruts - ridden sandy stretch.

As a warning to evening stroller a[illegible] his hope of enjoyin[illegible] refreshing breeze from across the lingering waters of the lagoon which again has become a ma[illegible] pool, reminding any commentator of the oftquoted saying "the mountain stream that ended in mud" The moats lie disguised, wild shrubs confirming the fact that the decay had been due to wanton negligence on the part of all concerned

Our concern for our own soil must be to preserve the pristine glory that was Jaffna pattanam in the forgotten past, the glory of not merely the status of the people but also the

(continued in page 5)

வான்முகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்.

*Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna. at their Saiva Prakasa Press 450, K. K. S. Road, Vannarponnai, Jaffna (Telephone: No. 22336) on Friday,*
*18, 25-2-83 4, 11-3-83*
Editor in Chief:
R. N. Sivapirakasam

